**அன்புள்ள வாடிக்கையாளருக்கு,**

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள நுகர்வோர் சாசனத்தின் கீழ் கோரப்பட்டுள்ள தேவையின் பிரகாரம், நாங்கள் வழங்குகின்ற உங்களுக்குத் தேவையான மற்றும் உங்களுக்குப் பொருத்தமான வங்கிக் கணக்குத் திட்டங்கள்/சேவைகளைத் தேர்ந்தெடுக்கும் போது உங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, முக்கியமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணங்களை [KFD] நாங்கள் தயாரித்துள்ளோம்.

முக்கியமான விடயங்கள் உள்ளடங்கிய ஆவணமானது [KFD], இலங்கை ரூபாய்களை அடிப்படையாகக் கொண்ட பல்வேறுபட்ட கணக்குகள் மற்றும் கணக்குகளுடன் தொடர்புடைய விசேட பொதிகள் மற்றும் தனிப்பட்ட வங்கியியலுக்கான நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயத்தை அடிப்படையாகக் கொண்ட கணக்குகள் ஆகியவை பற்றிய விரிவான அறிவை உங்களுக்கு வழங்கும்.

எவ்வாறாயினும், பின்வரும் KFD யில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களானது சட்டத்தில் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் மற்றும் வங்கியின் கொள்கைகளிலும் நடைமுறைகளிலும் ஏற்படுகின்ற மாற்றங்கள் காரணமாக திருத்தத்திற்கு உட்பட இடமுள்ளது என்பதைக் கருத்தில் கொள்ளவும். வங்கியின் அவ்வாறான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக KFD இல் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமிடத்து வங்கி அது தொடர்பாக உங்களுக்கு அறிவிக்கும் என்பதைக் கவனிக்கவும்.

உங்களுக்கு மேற்கொண்டும் தகவல் தேவைப்பட்டால், கீழே குறிப்பிட்டுள்ளவாறு www.nationstrust.com வலைத்தளம் ஊடாக எங்களைத் தொடர்பு கொள்ளவும். அல்லது 011 4 711 411 என்ற 24 மணி நேர துரித அழைப்பு மையத்துடன் தொடர்பு கொள்ளவும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள உங்களின் ஏதும் கணக்குகள் தொடர்பான ஏதேனும் முறைப்பாடுகள் இருந்தால், முறைப்பாடுகளைக் கையாளும் அதிகாரி, நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க் பீ.எல்.சீ, இலக்கம் 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 என்ற முகவரிக்கு முறைப்பாடு உள்ளடக்கப்பட்ட சுருக்கமான ஓர் அறிக்கையை எழுத்தில் அனுப்பி வைக்கவும். அல்லது [+94(0)114711411] எனும் தொலைபேசி இலக்கம் / [customerservice@nationstrust.com] எனும் மின்னஞ்சல் மூலம் எங்களைத் தொடர்பு கொள்ளவும். நாங்கள் உங்களுக்கு விரைவில் பதிலளிக்கத் தயாராக உள்ளோம்.

| கணக்கு பற்றிய விபரங்கள் | வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கின்ற நன்மைகள் | கட்டண வகைகளும் ஏனைய வங்கி அறவீடுகளும் | ஒரு கணக்கைத் தொடங்குவதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் | முக்கியமான நியதிகளும் நிபந்தனைகளும் |
|---|---|---|---|---|
| **நடைமுறைக் கணக்கு** | | | | |
| **நேஷன்ஸ் வியாபார நடைமுறைக் கணக்கு**<br><br>- இது வட்டி செலுத்தப்படாத ஒரு கணக்கு என்பதுடன் வங்கியின் வழக்கமான நடைமுறைக் கணக்காகவும் இருக்கிறது. | - ஓவர் டிராஃப்ட் வசதி தனிப்பயனாக்கப்பட்ட காசோலைப் புத்தகங்கள் | மாதாந்த சேவை கட்டணம் -<br><br>மாதாந்த சராசரி இருப்பு ரூ. 25,000/-க்கும் குறைவாக இருந்தால் இந்தக் கட்டணம் அறவிடப்படும்.<br><br>-நடைடுறைக் கணக்கு தொடர்பான கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் பற்றி வங்கியின் கட்டணப் பதிவேட்டில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. | -நடைமுறைக் கணக்கை ஆரம்பிப்பதற்காக வங்கியின் நியம கணக்கு ஆரம்பிக்கும் படிவத்தைப் பூர்த்தி செய்து, பின்வரும் ஆவணங்களுடன் ஏதேனும் ஒரு வங்கிக் கிளையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்:<br><br>- தேசிய அடையாள அட்டையின் (NIC) / செல்லுபடியாகும் கடவுச்சீட்டின் பிரதி<br><br>- தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வதிவிட முகவரி வேறுபடுமாக இருந்தால், முகவரியை உறுதிப்படுத்துவதற்கு எழுத்துமூல ஆதாரம் அவசியமாகும்.<br><br>-வியாபாரப் பெயரில் தொடங்குவதானால் வியாபாரப் பதிவுச் சான்றிதழ். | **தகைமை பெறுபவர்கள்:**<br><br>-தேசிய அடையாள அட்டை வைத்திருக்கும் 18 வயதுக்கு மேற்பட்ட இலங்கையில் வசிக்கும் இலங்கைப் பிரஜை.<br><br>-குறைந்தபட்ச ஆரம்ப வைப்புத் தொகை ரூ. 25,000 வாகும் என்பதுடன் சேவைக் கட்டணம் அறவிடப்படுவதைத் தவிர்க்க மேற்படி தொகை கணக்கில் பராமரிக்கப்பட வேண்டும்.<br><br>-நடப்புக் கணக்கிலிருந்து மேலதிகப் பற்று எடுத்தால் சேவைக் கட்டணம் அறவிடப்படும்.<br><br>-வரிக் கட்டணங்கள், குறைந்தபட்ச மேலதிகப் பற்றுக்கான வட்டி மற்றும் நடைமுறைக் கணக்குகளுக்கு ஏற்புடைய ஏனைய கட்டணங்கள் மற்றும் அறவீடுகள். |

- இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக, அனைத்து பொதுவான நியதிகள் மற்றும் நிபந்தனைகளும் நேஷன்ஸ் வியாபார நடைமுறைக் கணக்கிற்கு ஏற்புடையதாகும் என்பதுடன் முறைப்பாடுகளைக் கையாளும் நடைமுறைகளானது பொதுவான வியாபார நிபந்தனைகளின் கீழுள்ள https://www.nationstrust.com/images/pdf/general-business-conditions pdf இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

- அவ்வப்போது திருத்தத்திற்கு உட்படும் கட்டண வகைகள் மற்றும் வங்கியின் ஏனைய கட்டணங்கள் ஆகியன வங்கியின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும்.

- இந்த வங்கியானது, ரூ. 1,100,000/- வரை வைப்பிலிடுகின்ற ஒரு வைப்பீட்டாளருக்குப் பாதுகாப்பு வழங்குகின்ற இலங்கை மத்திய வங்கியின் (CBSL) கீழ் இயங்குகின்ற இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் (SLDIS) ஒர் உறுப்பினராகும்.

- இந்த ஆவணத்தின் ஆங்கில, சிங்கள மற்றும் தமிழ்ப் பிரதிகளுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்பட்டால், இதன் ஆங்கிலப் பிரதியே செல்லுபடியானதாகக் கருதப்படும்.